



# வருமானத்தை வரவேற்கலாமே!







“சிறுவயதில் நான் விளையாட்டாகச் செய்தவை எல்லாம் (கை)வினையாக மாறும் என்று நினைக்கவேயில்லை” என்று புன்னகையோடு பேசுகிறார் சென்னை, தி.நகர் பகுதியைச் சேர்ந்த பூமா தேவி. பி.எட் முடித்துவிட்டு ஸ்கூல் டீச்சராக இருந்தவரை கிராஃப்ட் டீச்சராக மாற்றியது கலைகள் மீதான காதல். “பரபரப்பான வாழ்க்கையால எந்திரமாகிக் கிடக்கிற மனதுக்கு இதம் தர்றதோட, வருமானத்துக்கும் வழி சொல்வதாக இருப்பதுதான் இதுபோன்ற கலைகளோட பெருமை. நான் கிராஃப்ட் ஸ்கூல் ஆரம்பிச்சு பத்து வருஷமாகுது. வயசு வித்தியாசம் இல்லாம ஆர்வம் இருக்கிற அனைவருக்கும் வகுப்பெடுக்கிறேன்” என்கிறவர், 'நம் தோழி' வாசகிகளுக்காக வீட்டு வாசலை அலங்கரிக்கும் தோரணம் செய்வது எப்படி என்று சொல்லித்தருகிறார். இதை குழந்தைகள்கூட எளிதில் செய்யலாம் என்பதால் பரீட்சை விடுமுறையில் இருக்கும் குழந்தைகளுக்கும் கொண்டாட்டம்தான்! (கத்தியைப் பயன்படுத்தி வெட்டும் வேலை கொஞ்சம் இருப்பதால் குழந்தைகள் பெரியவர்களின் துணையோடு செய்ய வேண்டும்.)

## என்னென்ன தேவை?

*6 மி.மீ அளவுள்ள எம்.டி.எஃப் மரப்பலகை, டென்டல் பவுடர் அல்லது பிளாஸ்டர் ஆஃப் பேரிஸ், ஃபெவிகால், செராமிக் கிளே அல்லது எம்சீல் அல்லது பேப்பர் மெஷ், கத்தி, பிரஷ், ஃபேப்ரிக் கலர், எனாமல் கலர், வார்னிஷ், பென்சில், பொம்மை (அலங்கரிக்க).*

## எப்படிச் செய்வது?

*பொதுவாக வீட்டு நிலைக் கதவு நீளம் மூன்று அடி என்பதாகத்தான் இருக்கும் அதனால் நாம் செய்யப் போகும் வரவேற்பு பலகை மூன்று அடி நீளம் இருந்தால் அனைத்து வாசல் கதவுகளுக்கும் பொருந்தும். மூன்று அடி நீளத்துக்கு மரப்பலகையை எடுத்து மாவிலை அல்லது தோரணம் என்று உங்களுக்குப் பிடித்தமான ஏதோ ஒரு வடிவத்தில் கார்பென்டரிடம் கொடுத்து வெட்டிக்கொள்ளுங்கள் (படம் 1). பிளாஸ்டர் ஆஃப் பேரிஸ் பவுடரில் ஃபெவிகால் மற்றும் சிறிது தண்ணீர் சேர்த்து தோசைமாவு பதத்துக்குக் கரைத்து வைத்துக் கொள்ளுங்கள் (படம் 2). வெட்டி வைத்திருக்கும் போர்டின் மீது இந்தக் கரைசலைப் பரவலாகத் தடவுங்கள் (படம் 3). ஒரு காகிதம் அளவுக்கு மெல்லிய அடுக்காகத் தடவிய பிறகு உள்ளங்கை ரேகை அதில் டிசைன் போல பதியும் வகையில் நன்கு அழுத்தி எடுங்கள் (படம் 4). அதன்பிறகு அந்த போர்டை மூன்று மணிநேரம் காயவிடுங்கள். போர்டு நன்றாகக் காய்ந்ததும் நல்வரவு, வெல்கம் போன்ற உங்களுக்குப் பிடித்த வரவேற்பு வார்த்தையையோ அல்லது கடவுள் பக்தியை வெளிப்படுத்தும் வார்த்தையையோ பென்சிலால் எழுதுங்கள்.*

*எழுதிய வார்த்தையின் மேலே எம்சீல் அல்லது செராமிக் கிளேவை உருட்டிவைத்து, மீதியாகும் பாகத்தை கத்தியால் வெட்டி ஒழுங்குபடுத்துங்கள் (படங்கள் 5, 6). எல்லா எழுத்தின் மீதும் கிளேவை ஒட்டியபிறகு அதன் மீது கத்தியால் கீறி உங்கள் கற்பனைக்கு ஏற்ற டிசைனை உருவாக்கிக் கொள்ளுங்கள் (படம் 7). ஒருநாள் காயவிட்டு விட்டு மறுநாள் அதன் மீது வண்ணம் திட்டுங்கள்.*

*வண்ணம் திட்டும்போது முதலில் ஃபேப்ரிக் கலரை பிரஷ்ஷால் எடுத்து வார்த்தைகள் மீது அடிக்க வேண்டும் (படம் 8). அதற்கு ஏற்ற காம்பினேஷனில் எடுப்பான நிறத்தை போர்டுக்குக் கொடுக்க வேண்டும் (படம் 9). இப்படி இருவேறு நிறங்களில் கலர் அடித்து காய்ந்ததும் போர்டின் பின்பிறம் சுவரில் மாற்ற ஏதுவாக கொக்கியை அடித்துவிட்டால் போதும். கண்ணைக்கவரும் தோரணம் தயார்.*

*விரும்பினால் போர்டின் மையத்தில் உங்களுக்குப் பிடித்த கடவுளின் படத்தையோ வேறு ஏதாவது பொம்மையையோ ஒட்டலாம் (படம் 10). போர்டு உட்பட ஒரு வரவேற்பு பலகை செய்ய குறைந்தபட்சம் 150 ரூபாய் செலவாகும். இதை 1500 ரூபாய்வரையில் விலை வைத்து விற்கலாம். ஏனென்றால் பொருளின் விலையைவிட உங்களுடைய கலைத் திறனுக்கான மரியாதைதான் இதில் முக்கியம் என்பதால் என்ன விலை சொன்னாலும் ரசனையானவர்கள் வாங்கிச் செல்வார்கள்*

*வெளியூருக்கு கிஃப்டாக எடுத்துச் செல்கிறவர்களுக்கு பலகையை இரண்டாக மடிக்கும் வகையில் கார்பென்டரிடம் சொல்லி வடிவமைத்து வாங்கலாம் (படம் 11). போர்டின் மீது ஸ்டோன்ஸ், சமிக்கி ஒட்டி, கூடவே இலைவடிவ டிசைனையும் சேர்த்து செய்தால் அதை இரண்டாயிரத்துக்கு மேல் விற்கலாம். இது மரத்தால் செய்யப்பட்டது என்பதால் உடையாது. அதனால் அடிக்கடி மாற்ற வேண்டிய அவசியமும் இருக்காது. வாசலில் மாட்டுவதால் அதன்மேலே படியும் தூசியை மட்டும் துடைத்துவிட்டால் போதும், உங்கள்வீட்டு வாசல் எப்போதும் பொலிவுடன் இருக்கும்.* ●














